**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.180** **நாள் : 02.06.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் இரவு நேரம் தங்கும் மையங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூக மேம்பாட்டுப் பிரிவு (Community Development Wing - CDW) மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு (Socio-Economic Development Wing - SEDW) ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்ற நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (02.06.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் 57 இரவு நேர தங்கும் மையங்களின் (Night Shelters) செயல்பாடுகள், பயனாளிகளின் தங்குமிடம் பயன்பாடு, கட்டட பராமரிப்பு, சேவை வழங்கல், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (Standard Operating Procedures – SOPs) பின்பற்றப்படுவது குறித்து ஆணையர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், இரவு நேரக் காப்பகத்தில் பயனாளிகள் தங்குவதற்கு வசதிகள் மற்றும் தரமான சேவைகள் திறம்பட வழங்கப்படுவதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், கண்காணிப்பு நடைமுறைகளை வலுப்படுத்தி, வழிகாட்டுதல்களை முழுமையாக பின்பற்றிட வேண்டும் என ஆணையாளர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவின் செயல்பாடுகள் குறித்தும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குழந்தைகள் கணக்கெடுப்பு (Children Survey) பணிகளின் முன்னேற்றம் குறித்தும், பள்ளிக்குச் செல்லாத குழந்தைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல் குறித்தும், களஆய்வு, தரவு சேகரிப்புகளை விரிவாக ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர் அவர்கள் இதன் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கணக்கெடுப்புப் பணிகளை விரைவுப்படுத்தி, தரவுகளின் துல்லியத்தையும் முழுமையையும் உறுதிசெய்திடவும், இரவு தங்கும் மையங்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOPs) தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும், அனைத்து தங்குமிடங்களிலும் ஒரே மாதிரியான செயல்பாட்டு தரநிலைகள், பொறுப்புணர்வு, ஆவணப் பராமரிப்பு மற்றும் தரமான சேவை வழங்கல் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம், நடைமுறைகளை விரைவில் இறுதி செய்து நடைமுறைப்படுத்தவும், அவற்றின் செயல்பாட்டை தொடர்ந்து கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் சமூக நல நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைத்து பங்குதாரர்களுடனும் ஒருங்கிணைந்து, ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளை காலவரையறைக்குள் செயல்படுத்திடவும், நிலுவையில் உள்ள பணிகளை விரைவாக முடித்திடவும், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை முறையாக பராமரித்திடவும், கண்காணிப்பு முறைகளை மேலும் வலுப்படுத்தி, அவ்வப்போது முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்திடவும், சமூக மேம்பாட்டுப் பிரிவு மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு ஆகியவற்றின் நோக்கங்களை திறம்பட நிறைவேற்றும் வகையில் அனைத்து பணிகளையும் காலதாமதமின்றி மேற்கொண்டு, தொடர்ச்சியான கண்காணிப்புடன் செயல்பட வேண்டும் என ஆணையர் அவர்கள் தொடர்புடைய அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**